தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.07.2013**

**வேளாண் விளைபொருள்கள்: கூடுதல் விலை நிர்ணயம் செய்ய வலியுறுத்தல்**

வேளாண் விளை பொருள்களுக்கு உற்பத்தி செலவைக் காட்டிலும் 50 சதவீதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பல்வேறு வேளாண் விளைபொருள்களுக்கு மத்திய அரசு செய்துள்ள விலை நிர்ணயம் மிகக் குறைவாக உள்ளது. உற்பத்திச் செலவுகள் கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை வழங்க வேண்டும்.

கரும்பு, ரப்பர், சணல், பருத்தி ஆகியவற்றுக்கு போதுமான விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. விவசாயிகளைப் பாதுகாக்க எம்.எஸ்.சுவாமிநாதன் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும்.

விவசாயிகள் விளை பொருள்களுக்கு உற்பத்திச் செலவுகளைக் காட்டிலும் 50 சதவீதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து உரிய நேரத்தில் பொருள்களை கொள்முதல் செய்ய வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகளில் விவசாயிகள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

வேளாண் விளை பொருள்களின் விலை ஏற்ற இறக்கங்களைத் தடுக்க தனி நிதி உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு, உள்ளாட்சி அமைப்புகள் மீது கடும் தாக்குதலை தொடுத்து வருகிறது. இப்போது நடைபெறும் தாக்குதல்கள் மேற்கு வங்கத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும், (1970-77-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு) நடைபெறவில்லை.

மேற்கு வங்கத்தில் ஜனநாயகத்தை பாதுகாத்திட தொடர்ந்து போராட்டங்களை நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இன்று விவசாயிகள் பேரணி, பொதுக்கூட்டம்**

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாட்டு நிறைவுப் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் சனிக்கிழமை மாலை நடக்கிறது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-வது மாநாடு ஜுலை 24-ம் தேதி கடலூரில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

மாநாட்டு நிறைவுநாளை முன்னிட்டு சனிக்கிழமை மாலை 3 மணிக்கு, பேரணி, எஸ்.என்.சாவடியிலிருந்து புறப்பட்டு கடலூர்- பண்ருட்டி சாலை வழியாக மஞ்சக்குப்பம் மைதானத்தில் நிறைவடைகிறது.

அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவரும், சிதம்பரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் கடலூர் மாவட்டச் செயலரும் வரவேற்புக் குழு பொருளருமான டி.ஆறுமுகம் வரவேற்று பேசுகிறார்.

திரிபுரா மாநில முதல்வர் மாணிக்சர்க்கார், அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.ராமச்சந்திரன்பிள்ளை, பொதுச்செயலர் கே.வரதராஜன், சூரியகாந்த மிஸ்ரா, கொடியேரி பாலகிருஷ்ணன், என்.சங்கரய்யா, மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் ஆகியோர் பேசுகின்றனர்.

**மேட்டூரிலிருந்து பாசனத்துக்கு நீர் திறந்துவிடக் கோரிக்கை**

மேட்டூரிலிருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்கு உடனடியாக நீர் திறந்து விட வேண்டும் என பாஜக தேசிய கவுன்சில் உறுப்பினரும், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் பாதுகாப்புச் சங்க மாநில துணைத் தலைவருமான கே.வி.கண்ணன்பிள்ளை தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தி: தென்மேற்குப் பருவமழை சரியான நேரத்தில் தொடங்கி இன்று வரை காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

அதன் விளைவாக கிருஷ்ணராஜசாகர், கபிணி அணைகள் நிரம்பி உபரி நீர் மேட்டூருக்கு வெளியேற்றப்படுகிறது.

கர்நாடகஅரசு வழக்கம்போல் தங்களது அணைகளை நிரப்பி கொண்டு இந்த ஆண்டு தமிழகத்தை வடிகாலாக பயன்படுத்துகிறது.

வெள்ளிக்கிழமை மதியம் நிலவரப்படி மேட்டூர் அணை 85 அடியை எட்டியுள்ளது. நீர்வரத்து 75 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் மேட்டூரின் நீர்மட்டம் 90 அடியை தாண்டிவிடும் நிலை உருவாகியுள்ளது. மேலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர் வரத்து அதிகரிக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை, முற்றிலும் பொய்த்துவிட்டது.

அதன் காரணமாக திருச்சி, தஞ்சை, அரியலூர், நாகை, திருவாரூர், கடலூர் ஆகிய மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. குடிநீர்த் தட்டுபாடும் நிலவுகிறது. டெல்டா மாவட்டங்களில் காவிரி நீர் அநேகமாக அனைத்து கிராமங்களில் உள்ள பெரிய, சிறிய வாய்க்கால்களில் ஓடுகிறது.

காவிரி நீர் கிடைக்கப் பெறாததால் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டது. எனவே தமிழக முதல்வர் மேட்டூரின் நீர் இருப்பு அளவை கருத்தில் கொண்டு உடனடியாக நீரைத் திறக்க உத்தரவிட வேண்டும்.

நீரைத் திறந்துவிட்டால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயிகள் பம்பு செட்டு பாசனம் செய்ய வாய்ப்பாக இருக்கும்.

முதலில் 10 ஆயிரம் கனஅடியும், பின்னர் படிபடியாக 20 ஆயிரம் கனஅடி நீர் திறந்தால் அந்த நீர் கடை, மடை பகுதி வரை சென்றடையும்.

மேட்டூரிலிருந்து உடனடியாக நீர் திறந்துவிடப்பட்டால் பொதுமக்களும், விவசாயிகளும் ஆடிப்பெருக்கை மகிழ்ச்சியாக கொண்டாட வாய்ப்பாக இருக்கும் என கே.வி.கண்ணன்பிள்ளை தெரிவித்துள்ளார்.

**நீர்வளத் திட்டப் பயிற்சி**

உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் நீர், நிலவளத் திட்டம் குறித்த பயிலரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பின்னல்வாடி, பெரியகுறுக்கை, காட்டுஎடையார், பு.கிள்ளனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் இதில் பங்கேற்றனர்.

இப்பயிலரங்கத்துக்கு வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் அன்பழகன் வரவேற்றார். விதை அலுவலர் கயல்விழி, விரிவாக்க அலுவலர் காமராஜ், துணை வேளாண்மை அலுவலர் அலெக்சாண்டர், ஆத்மா திட்டத் தலைவர் கோவிந்தன், உதவி வேளாண்மை அலுவலர் வடிவேல்முருகன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.உதவி வேளாண்மை அலுவலர் முருகன் நன்றி கூறினார்.

**பயிர் காப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

காப்பீட்டு நிறுவனங்கள் பயிர் காப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கே. மனோகரன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வறட்சி பாதித்த பகுதிகளை அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்கள் கணக்கெடுப்பின்போது சேர்க்க மறுத்தால், மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளிக்கலாம். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் உறுதி அளித்தார்.

அதைத் தொடர்ந்து, மா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வறட்சி நிவாரணம் வழங்க கோரிக்கை வைத்தனர். அதற்கு பதில் அளித்த தோட்டக்கலைத் துறை அதிகாரி, ஓர் ஏக்கரில் 7 டன் மகசூல் சாதாரணமாக கிடைக்க வேண்டும். வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில் 3.5 டன்னுக்கு கீழ் மகசூல் இருந்தால் தான், அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது என்றார்.

பழனி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கொய்யா விவசாயிகள் நிவாரணம் கோரி ஆட்சியரிடம் முறையிட்டனர். அதேபோல், பூஞ்செடி பயிரிட்ட விவசாயிகளும் நிவாரணம் கேட்டு மனு அளித்தனர்.

இதுவரை நிவாரணம் கிடைக்கப் பெறாத விவசாயிகள் அது குறித்து மனு அளித்திருந்தால், அவர்களுக்கு மத்திய அரசு நிதி கிடைத்தவுடன் நிவாரணம் வழங்கப்படும். மக்காச்சோளம் பயிரிட்ட 5 ஆயிரம் விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்கும் என ஆட்சியர் பதில் அளித்தார்.

மேலும் அவர் கூறுகையில், விவசாயிகள் வங்கிகளில் வாங்கிய கடனை முறையாக திருப்பி செலுத்துவதில்லை என புகார் கூறப்படுகிறது. இதனால், வங்கிகளில் நகையை அடகு வைத்து தொகை பெற வேண்டிய சூழ்நிலை உள்ளது என்றார்.

காப்பீட்டுத் தொகை கிடைக்குமா?

கரும்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு செய்த தொகை ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரை கிடைக்கவில்லை. அவற்றை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பெரும்பாலான விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதில் அளித்த காப்பீட்டு நிறுவன அதிகாரி, வறட்சி பணிகளால், காப்பீட்டு பணிகளை கணக்கீடு செய்வதில் தாமதமாகி விட்டதாகவும், 3 மாதத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தக்காளி, வெண்டை, மிளகாய், சின்னவெங்காயம் சாகுபடி செய்ய விதை வழங்கப்படுமா என்ற விவசாயிகளின் கேள்விக்கு, மாநில அரசு தரமான விதைகள் வழங்க மாவட்டத்துக்கு ரூ. 23 லட்சம் நிதி அளித்துள்ளது. அதன்மூலம், தரமான விதைகள் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பள்ளிக் குழந்தைகளுக்கு வங்கி கணக்கு:

பள்ளிக் குழந்தைகளுக்கு ஊக்கத் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் புகார் அளித்தனர்.

அதற்கு, ஒவ்வொரு பள்ளி குழந்தைக்கும் தனித்தனி வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, சென்னையிலிருந்து அந்த கணக்குகளில் நேரடியாக பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வங்கிக் கணக்கு தொடங்கும் பணிகள் 80 சதவீதம் நிறைவடைந்துவிட்டன. பணிகள் முடிந்தவுடன் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்றார் ஆட்சியர்.

இதில், வேடசந்தூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் எஸ். பழனிச்சாமி, கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் த. செந்தில்குமரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செந்தில்வேலன், தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் கிஷோர்குமார், சின்ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

**கால்நடைகளுக்கு தடுப்பூசி**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பரதராமி அருகே மர்ம நோயால் கால்நடைகள் இறப்பதாக வந்த தகவலை அடுத்து ஆட்சியர் பொ.சங்கர் கால்நடைத் துறையினருக்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இதையடுத்து, வேலூர் கால்நடை நோய் புலனாய்வுக் குழுவினர் இறந்த கால்நடைகளை பரிசோதித்தபோது அடைப்பான் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தது தெரியவந்தது.

இதையடுத்து, பரதராமி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்த 556 கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது.

நோய் பிற இடங்களுக்குப் பரவாமல் இருக்க குடியாத்தம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தொடர்ந்து தடுப்பூசி போடும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**விவசாயிகளுக்கு நெருக்கடி அளிக்கக் கூடாது**

கடன் வசூலிப்பில் விவசாயிகளுக்கு வங்கிகள் நெருக்கடி அளிக்கக் கூடாது என்றார் திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர் த. தியாகராஜன்.

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து அவர் மேலும் பேசியது: வறட்சி காரணமாக சிரமத்துக்குள்ளாகியுள்ள விவசாயிகளிடம் கடனை திரும்ப செலுத்த வலியுறுத்தி வங்கிகள் நெருக்கடி அளிப்பதாகவும், டிராக்டர் உள்ளிட்டவற்றை ஜப்தி செய்வதாகவும் இங்கு விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.எனவே, சிரமமான இந்த நேரத்தில் விவசாயிகளை கடனை செலுத்துமாறு வங்கிகள் எவ்வகையிலும் நெருக்குதல் அளிக்கக் கூடாது என மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளார். அதன் பிறகும் இதுபோன்ற நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபடுவது சரியான நடவடிக்கையல்ல.

மேலும், விவசாயிகள் இங்கு தெரிவிக்கும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதற்குரிய தகவலை தொடர்புடைய விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

விவசாயிகள் இங்கு தெரிவித்த கோரிக்கைகளில் சில அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது என்பதால், அவை அரசின் கவனதுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார் அவர்.

மண்டல இணைப்பதிவாளர் (கூட்டுறவு) ராஜேந்திர பிரசாத்: மத்திய கால கடனாக மாற்றப்பட்ட நிலுவை கடன் தொகைக்கு 10.25 சதவீத வட்டியை ரத்து செய்ய வேண்டுமென அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன என்றார்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் டி. ராமதாஸ் : விவசாயிகளிடம் ஜப்தி உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என அனைத்து வங்கிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரத ஸ்டேட் வங்கி ஒரு டிராக்டரை ஜப்தி செய்ததாக வந்த தகவலையடுத்து, அவர்களிடம் பேசி அந்த டிராக்டர் மீண்டும் விவசாயியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இனி இதுபோன்ற நடவடிக்கைகள் இருக்காது.

மேலும், பாரத ஸ்டேட் வங்கி எந்த உத்தரவுக்கும் கட்டுப்படுவதில்லை, அந்த வங்கி மீது மாவட்ட ஆட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கலாம், அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டோம் என்றார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாண்டியராஜன், வேளாண் இணை இயக்குநர் குருராஜ் சிங் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**பண்டுதகாரன்புதூரில் ஆடு வளர்ப்புப் பயிற்சி**

கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூலை 30-ஆம் தேதி பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் ந. அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இப்பயிற்சியில் ஆடுகளுக்கு பரண் முறையில் கொட்டகை அமைத்தல், ஆடுகளைத் தேர்வு செய்தல், தீவன பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள், பொருளாதாரம் மற்றும் பரண் மேல் ஆடு வளர்ப்பில் உள்ள சாதக, பாதகங்கள் குறித்த தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இதில் பங்கேற்க விரும்புவோர் காலை 9.30 மணிக்கு பயற்சி மைய வளாகத்துக்கு வந்துவிட வேண்டும். மேலும், பயிற்சி தொடர்பான விவரங்களை அறிய 04324-

294335 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**சொட்டு நீர்ப்பாசனத்தில் அதிக விளைச்சல் பெறலாம்**

சொட்டு நீர்ப்பாசனத்தில் 20 முதல் 50 சதவிகிதம் வரை விளைச்சல் அதிகரிக்கிறது என்றார் தாந்தோனி

வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம்.

தேசிய நுண்ணீர்ப்பாசன இயக்கத் திட்டத்தின் கீழ் நுண்ணீர்ப்பாசன முனைப்பு முகாம் கந்தசாரப்பட்டி கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. முகாமில் பங்கேற்று, அவர் மேலும் பேசியது:

சொட்டு நீர்ப்பாசன முறையில் நீரை பயன்படுத்தும் திறன்

அதிகரிப்பதால் அதிகப்படியான பரப்பில் பாசனம் செய்ய முடிகிறது.

பயிருக்குத் தேவையான நீர் மற்றும் உரங்கள் அளிக்கப்படுவதால் விளைச்சலும் அதிகரிக்கிறது.

சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100 சதவிகித மானியமும், பெரு விவசாயிகளுக்கு 12.5 ஏக்கர் வரை 75 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது என்றார் அவர்.

முகாமில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை தாந்தோனி வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் கு. கல்யாணசுந்தரம், இரா. பாலசுப்பிரமணியன், கா. லெனின் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு விகிதாசார முறையில் மின் இணைப்பு**

மீன் வளர்க்கும் விவசாயிகள் விகிதாசார அடிப்படையில் மின் இணைப்பு பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்துடன் ஒருங்கிணைந்த குளங்களில் மீன் வளர்ப்பு, இறால் மீன் வளர்ப்பு மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் ஏற்கனவே பெற்ற இலவச மின்சாரத்தைப் பயன்படுத்தி குளங்களில் தண்ணீர் இறைத்து மீன் வளர்க்கவும், இதர மீன்கள் மற்றும், இறால் மீன் வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் மின் விகிதாச்சாரம் ஐஐஐ அ(1) பிரிவின் கீழ் மின் இணைப்பு பெற்று, சலுகைக் கட்டணத்தில் மீன் வளர்ப்புத் தொழிலில் ஈடுபடலாம் என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கடந்த 30.3.2013-ல் அறிவித்துள்ளது. எனவே, விவசாயிகள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) நெ.4, காயிதே மில்லத் தெரு, காஜாநகர், திருச்சி-20 என்ற முகவரியில் அணுகலாம்.

**விவசாயிகள் பிரச்னை குறித்து கருத்துக்கேட்பு கூட்டம்**

பேராவூரணி வேளாண்மை உதவி அலுவலகத்தில் இன்றைய விவசாயத்தில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகள் குறித்த கருத்துக்கேட்பு கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வேளாண் உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் தலைமை வகித்தார். பேராவூரணி வட்டாரத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் தங்கள் பகுதிகளில் விவசாயம் செய்வதில் ஏற்படும் பிரச்னைகள் குறித்து கூறியது:

ஏரி, குளங்களை தூர்வார வேண்டும். குளத்துக்கு வரும் வாய்கால்களை சுத்தம் செய்ய வேண்டும். வடிகால் வாய்க்கால்களை மழைக்காலத்துக்கு முன்பு சுத்தம் செய்ய வேண்டும்.

வேளாண் துறையில் வழங்கப்படும் இடுபொருள்கள் அனைத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் வழங்க வேண்டும்.

மானிய விலையில் நடவு இயந்திரம், அறுவடை இயந்திரம், ஊராட்சிக்கு ஒன்று வழங்கப்பட வேண்டும்.

புதிய நெல் ரகங்களை சம்பா சாகுபடிக்கு தர வேண்டும். நீராதாரங்களை பெருக்குவதற்கு பண்ணைக் குட்டைகள் அமைப்பதுபோல் குளங்களின் முழு கொள்ளளவு பரப்புக்கு குளத்தை ஆழப்படுத்த வேண்டும்.

குளத்து வண்டல் மண்ணை விவசாய நிலத்துக்கு பயன்படுத்திட அனுமதி வழங்க வேண்டும். அக்னியாறு, அம்புலியாறு பகுதிகளில் சிறிய அளவிலான தடுப்பணைகள் சுமார் 200 மீட்டருக்கு ஒன்று வீதம் கட்டித்தர வேண்டும்.

மேலும், தென்னை சாகுபடிக்கு சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள், நீர் கொண்டு செல்லும் குழாய்கள், நெல் வயல்களுக்கு குளங்களிலிருந்து நீர் கொண்டு செல்லும் குழாய்கள் அதிக அளவில் மானியத்தில் வழங்கப்பட வேண்டும் என்றனர்.

கூட்டத்தில் முன்னோடி விவசாயிகள் அம்பாமணி, சண்முகநாதன், செல்வராஜ், ராதாகிருஷ்ணன், நாகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் கா. முருகேசன் வரவேற்றார்.

துணை வேளாண் அலுவலர் பூ.தி. மணிமாறன் நன்றி கூறினார்.

**கரும்பு விவசாயிகள், தொழிலாளர்கள் வெளிநடப்பு**

தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கரும்பு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர விமல்நாதன் பேசியது:

திரு ஆரூரான் சர்க்கரை ஆலையும், அம்பிகா சர்க்கரை ஆலையும் ரூ. 94 கோடிக்கும் அதிகமாக விவசாயிகளுக்கு கரும்பு பணம் பட்டுவாடா செய்யாமல் உள்ளன. இந்தத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுத் தருவதில் மாவட்ட நிர்வாகம் மிகத் தாமதமான நடவடிக்கையை எடுத்து வருகிறது. மாவட்ட நிர்வாகத்தின் நடவடிக்கை அனைத்தும் இரு ஆலை நிர்வாகங்களுக்கு ஆதரவாக இருக்கிறது. மேலும், மாவட்ட நிர்வாகம் பொய்யான வாக்குறுதியை அளித்து வருகிறது. இதைக் கண்டித்து, கரும்பு விவசாயிகள் கருப்புப் பட்டை அணிந்து வெளிநடப்பு செய்கிறோம் என்றார் சுந்தர விமல்நாதன். இதையடுத்து, கரும்பு விவசாயிகள் சுமார் 20 பேர் வெளிநடப்பு செய்து சுமார் 15 நிமிஷங்களுக்கு பிறகு கூட்டத்துக்குத் திரும்பினர்.

இதனிடையே, அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் ஆர். வாசு, செயலர் கே. பக்கிரிசாமி, ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார் உள்பட சுமார் 15 பேர் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர், கூட்ட அரங்கம் முன் முழக்கங்கள் எழுப்பிய அவர்கள் தெரிவித்தது:

மாவட்டத்தில் நூறு வேலை திட்டத்தில் 90 சதவீதம் பெண்கள்தான் வேலைக்கு வருகின்றனர். அவர்களுக்கு ரூ. 60, 70 மட்டுமே ஊதியம் வழங்கப்படுகிறது. சட்டப்படி ரூ. 148 ஊதியம் வழங்கப்படுவதில்லை. இதுதொடர்பாக காரணம் கேட்டால் 42 கன அடி மண் வெட்டினால் மட்டுமே ரூ. 148 ஊதியம் வழங்கப்படும் என அலுவலர்கள் கூறுகின்றனர். கடும் வறட்சியில் மண் இறுகி உள்ளதால் ஒரு கன அடி மண் வெட்டினால் 52 கிலோ எடை உள்ளது. 42 கன அடி மண் 2 டன்னிலிருந்து 2.5 டன் வரை எடையுள்ளது. இவ்வளவு எடையுள்ள மண்ணைப் பெண்களால் வெட்ட இயலாது. எனவே, நூறு வேலை திட்டத்தில் வரும் பெண்களுக்கு குறைவாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. வறுமையின் பிடியில்

சிக்கியுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு  சட்டப்படி கூலி ரூ. 148-க்கு குறையாமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**சம்பா சாகுபடிக்கு தண்ணீர் விட விவசாயிகள் வலியுறுத்தல்**

மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு முன்னதாகவே தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமை வகித்தார்.

பாச்சூர் புண்ணியமூர்த்தி: குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் நடவு முடிந்த பிறகும் கூட விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வரவில்லை. இதுதொடர்பாக கேட்டால் கிராம நிர்வாக அலுவலரின் சிட்டா அடங்கல் வேண்டும் எனக் கூறுகின்றனர்.

மேட்டூர் அணையிலிருந்து ஆகஸ்ட் மாத இரண்டாவது வாரத்தில் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். மார்கழி மாதத்தில் அறுவடைக்கு வரும் வகையில் மத்திய கால விதைநெல் ரகம் வழங்க வேண்டும்.

ஆட்சியர்: குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 8,700 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. சிலருக்கு கிடைக்கவில்லை. அவர்களுக்கு இரு நாள்களில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குச் சிரமத்தை  ஏற்படுத்தாத வகையில் அனைவருக்கும் சிட்டா அடங்கல் ஏற்பாட்டை வருவாய் துறை அலுவலர்களே செய்துவிட்டனர்.தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கக்கரை ஆர். சுகுமாரன்: நிலத்தடி நீர்மட்டம் மிகவும் கீழே சென்றுவிட்டது. குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவுகிறது. எனவே, ஆகஸ்ட் முதல் வாரத்தில் தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர விமல்நாதன்: குறுவை சாகுபடி இனிமேல் செய்ய வாய்ப்பில்லை. எனவே, நிலத்தடி நீர் உயருவதற்கு வாய்ப்பாக மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்காக விடப்படும் 3,000 கன அடி வீதம் என்பதை 8,000 கன அடி வீதமாக உயர்த்த வேண்டும்.

பொன்னவராயன்கோட்டை வா. வீரசேனன்: பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்றவை கடைமைடைப் பகுதிகள். இந்தப் பகுதிகளுக்கும் நாற்று நற்று, நடவுப் பணி முடியும் வரை முறை வைக்காமல் தண்ணீர் விடும் அளவுக்கு எப்போது சாத்தியப்படுகிறதோ அப்போது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை திறந்துவிட்டு 4 நாள்களில் நிறுத்தும் நிலையை ஏற்படுத்த வேண்டாம்.

ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார்: கடந்த ஆண்டு மேட்டூர் அணை நீர்மட்டம் 84 அடியாக இருக்கும் போதே செப்டம்பரில் திறக்கப்பட்டது. இப்போது, ஜூலை இறுதியிலேயே அதே அளவுக்குத் தண்ணீர் உள்ளது. குடிநீருக்கும், ஆடிப்பெருக்குக்கும் தண்ணீர் தேவைப்படுகிறது. நிலத்தடி நீரில் உப்புத்தன்மை சேர்ந்துவிட்டதால், குறுவை சாகுபடி செய்பவர்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டு வழக்கமான அளவான 2.63 லட்சம் ஏக்கர் நிலத்திலும் சம்பா சாகுபடி செய்யப்பட வேண்டும். எனவே, தண்ணீர் திறக்கும் தேதியும், விவசாயிகள் செய்ய வேண்டிய முன் ஆயத்தப் பணிகள் குறித்தும் தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக உடனடியாக அறிவிக்க வேண்டும்.

## குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்துக்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு

நாகை மாவட்டத்தில் குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருள்கள் வழங்க ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

திருமருகல் ஒன்றியம் மேலப்பூதனூர் ஊராட்சியில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருள்களை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த 5 விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் வேளாண் கருவிகள் மற்றும், இடுபொருள்களை வழங்கிய பின்னர் அளித்த பேட்டி:

தண்ணீர் பற்றாக்குறையால் குறுவை சாகுபடியில் பாதிப்பு ஏற்படாமலிருக்கும் வகையில், விவசாயிகளுக்காக இந்த சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், சிறு, குறு விவசாயிகள் பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் 6 மீட்டர் நீளம் 9 மி.மீ சுற்றளவு கொண்ட எச்.டி.பி.இ. பைப்புகள், நுண்ணுரம், உயிர் உரங்கள், பூச்சிக் கொல்லிகள் வழங்கப்படுகின்றன. நாகை மாவட்டத்தில் திருமருகல், செம்பனார்கோவில், மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி, கொள்ளிடம் ஆகிய 6 ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென, ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான நடவு மற்றும் உழவு இயந்திரங்கள், மண் சமப்படுத்தும் லேசர் கருவிகள், களையெடுக்கும் கருவிகள், அறுவடை இயந்திரம் ஆகியன வேளாண் பொறியியல் துறையில் போதுமான எண்ணிக்கையில் உள்ளன.நாகை மாவட்டத்துக்குத் தற்போது நடமாடும் மண் பரிசோதனை வாகனம் வந்துள்ளது. இதை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் முனுசாமி.

வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் செல்வின், உதவி இயக்குநர் ராஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**"சொட்டு நீர் பாசனத்தில் கவனம் செலுத்த வேண்டும்**

விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

மன்னார்குடியை அடுத்த வடுவூர்மேல்பாதி ஊராட்சி கொண்டையூரில் தோட்டக்கலைத்துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற நுண்ணீர் பாசன சிறப்பு முகாமை தொடங்கி வைத்து அவர் பேசியது: குறைந்த அளவு தண்ணீரில் அதிகப் பரப்பளவில் பயிர் செய்யும் நோக்கிலும், விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவும், தமிழகத்தில் புதிய பசுமை புரட்சியை ஏற்படுத்தவும் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

2.5 ஏக்கர் நன்செய் நிலம், 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 % மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 75 % மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படுகிறது. இதனால் உற்பத்தி இரண்டு மடங்கும், வருவாய் மூன்று மடங்கும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மாவட்டத்தில் 326 விவசாயிகள் 384.16 ஹெக்டேர் நிலத்தில் சொட்டு நீர் பாசன கருவிகளை அமைப்பதற்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் குறைந்த பட்சம் 180 ஹெக்டேரில் சொட்டு நீர் பாசன முறையை பின்பற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது நடராசன்.

நிகழ்ச்சியில் நீடாமங்கலம் ஒன்றியக் குழுத் தலைவர் ராஜேந்திரன், ஊராட்சித் தலைவர்கள் இளவேணி, த. இந்திராணி, வேளாண் இணை இயக்குநர் கணேசன், தோட்டக்கலை துணை இயக்குநர் செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தாமிரவருணி பாசன பகுதி முழுவதற்கும் கார் சாகுபடிக்கு தண்ணீர் வழங்க வேண்டும்'**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தாமிரவருணி பாசனப் பகுதிகள் முழுவதற்கும் கார் சாகுபடிக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என தூத்துக்குடி மக்களவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆர். ஜெயதுரை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, தமிழக தலைமைச் செயலர் மற்றும் பொதுப்பணித் துறை முதன்மைச் செயலருக்கு அவர் அனுப்பியுள்ள மனு விவரம்: தூத்துக்குடி

மாவட்டத்தில் தாமிரவருணி பாசனத்தில் மருதூர் மேலக்கால், கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் பாசன கால்வாய்கள் மற்றும் நேரடி குளத்து பாசனம் மூலம் சுமார் 46,107 ஏக்கர் நன்செய் நிலங்கள், பாசன வசதி பெறுகின்றன.

ஆனால், கார் சாகுபடிக்கு மருதூர் மேலக்கால், கீழக்கால் மூலம் 7,524 ஏக்கர் விளைநிலங்களுக்கு மட்டுமே சாகுபடி செய்ய தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. மருதூர் மேலக்கால், கீழக்கால் மூலம் பாசன வசதி பெறும் விளை நில பரப்பு 20,547 ஏக்கர் ஆகும். இதில் 7,524 ஏக்கருக்கு மட்டுமே அரசு அனுமதி அளித்துள்ளது. 13,023 ஏக்கருக்கு அனுமதியில்லை. 25,560 ஏக்கர் விளைநில பகுதி கொண்ட ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால பாசனத்திற்கும் அரசின் அனுமதி இல்லை. எனவே, தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி பாசனத்தில் உள்ள அனைத்து பகுதிக்கும் கார் சாகுபடிக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் சனிக்கிழமை மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கூடலூரில் 70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. தேவாலாவில் 60 மி.மீ. மழையும், சின்னக்கல்லாற்றில் 50 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

பெரியாறு, வால்பாறை (40 மி.மீ.), நடுவட்டம் (30 மி.மீ.), பொள்ளாச்சி, பேச்சிப்பாறை, குந்தா (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.07.2013**

### கால்நடை தீவனம் பயிரிட்டால் ரூ.12 ஆயிரம் மானியம் விவசாயிகள் கவனத்திற்கு

திண்டுக்கல்:தமிழகத்தில் கால்நடை தீவனம் பயிரிடும் விவசாயிகளுக்கு ரூபாய் 12,000 மானியம் வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.கால்நடை வளர்ப்பில் தீவனம் முக்கிய பங்காற்றுகிறது. இன்றைய சூழ்நிலையில் மேய்ச்சல் தரை சுருங்கி வருவதாலும், தீவனத்தின் விலை கடுமையாக உயர்ந்தள்ளதாலும் குறைந்த இடத்தில் அதிக மகசூல் தரக்கூடிய கோ 4 தீவனப்புல் வளர்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இது மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் நீர்பாசன வசதியுள்ள கால்நடை வளர்க்கும் விவாயிகளுக்கு 0.25 ஏக்கர் நிலத்தில் தீவனப்புல் பயிரிட 100 சதவீதம் மானியம் ரூ.3 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. தகுதியுள்ள விவசாயிகள் அதிகபட்சமாக ஒரு ஏக்கர் வரை ரூ.12 ஆயிரம் வரை மானியம் பெற்று பயனடையலாம். மழை பெய்து நிலத்தடி நீர் குறைந்துள்ளதை கருத்தில் கொண்டு குறைந்த நீரை பயன்படுத்தி அதிக மகசூல் அடையும் பொருட்டு மழை தூவான் கருவி 75 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக மானியத்தொகை ஒரு விவசாயிக்கு ரூ.18750 வழங்கப்பட உள்ளது.தீவனத்தை கால்நடைகள் கழித்து வீணாக்காமல் உண்ணுவதற்காக புல் நறுக்கும் கருவி 76 சதவீதம் மானியத்தில் வினியோகம் செய்யப்பட உள்ளது. மாவட்ட கால்நடை பண்ணைகளில் உற்பத்தி செய்து ஒரு விவசாயிகளுக்கு 25 நாற்றுக்கள் வீதம் வழங்கப்பட உள்ளது. தேவையும், ஆர்வமுள்ள கால்நடை வளர்க்கும் விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகலாம்.

## கடனா அணை நிரம்பியதால்விவசாய பணிகள் தீவிரம்

ஆழ்வார்குறிச்சி:கடனா அணை பகுதியில் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் விவசாய பணிகளை துவக்கியுள்ளனர்.கடந்தாண்டு மழையே இல்லாததால் கார் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். இந்தாண்டு வருண பகவானின் கருணையால் நன்கு மழை பெய்து கடனா, ராமநதி அணைகளும் நிரம்பி வழிகின்றன. கடந்த 40 நாட்களுக்குள் சுமார் 6 முறை அணைக்கட்டுகள் நிரம்பி வழிந்தது. கடனா அணைநீரினை பயன்படுத்துவோர்கள் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புகள் சாகுபடி செய்ய தங்கள் விவசாய பணிகளை துவக்கியுள்ளனர். பல இடங்களில் நாற்று நட்டுவிட்டனர். சில இடங்களில் தண்ணீரை பார்த்த மகிழ்ச்சியில் இதுவரையிலும் விவசாய பணிகளை ஆரம்பிக்காதவர்கள் கூட விவசாய பணிகளை துவக்கியுள்ளனர்.

## பாரூரில் நெல் கொள்முதல் மையம் துவங்ககுறைதீர் கூட்டத்தில் விவசாயி கோரிக்கை

கிருஷ்ணகிரி: "பாரூரில் நெல் கொள்முதல் மையம் துவங்க வேண்டும்' என, குறைதீர் கூட்டத்தில் விவசாயி கோரிக்கை விடுத்தார்.கிருஷ்ணகிரியில், கலெக்டர் ரஜேஷ் தலைமையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் முகமது ஜபருல்லா, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மோகன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:சென்னையா: ஆடி, 18 பண்டிகை அன்று ஆற்றங்கரையோர கிராம மக்கள் மட்டுமன்றி பலரும் தென்பெண்ணை ஆற்றில் நீராடி இஷ்ட தெய்வத்தை வணங்குவது தொன்று தொட்டு நடந்து வருகிறது. எனவே, கே.ஆர்.பி., அணையில் இருந்து அனுமந்தீர்த்தத்துக்கு தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்துவிடவேண்டும்.கலெக்டர் ராஜேஷ்: கே.ஆர்.பி., அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு இடது மற்றும் வலது புறகால்வாயில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இருப்பினும் கர்நாடகா மாநிலத்தில் தொடர் மழை பெய்து வருவதால், கே.ஆர்.பி., அணைக்கு நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு, 493 கனஅடி நீர் வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்க

வாய்ப்புள்ளதால் பொதுப்பணித்துறை அதிகாரிகளை கலந்து ஆலோசித்து ஆடி பெருக்குக்கு முன் ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படும்.ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளின் நிலத்தில் விதைப் பண்ணை அமைத்து தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்.வேளாண் இணை இயக்குனர் முகமது ஜபருல்லா: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளின் நிலத்தில் விதைப்பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கோவை வேளாண் பல்கலைகழகத்தில் இருந்து ஆதார விதை பெறப்பட்டுள்ளது.சக்கரவர்த்தி: பாரூர் ஏரி பாசனம் மூலம் பாரூர், அரசம்பட்டி சுற்றுவட்டார கிராமங்களில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்வதால், பாரூரில் அரசு நெல் கொள் முதல் மையம் அமைக்க வேண்டும்.கலெக்டர் ராஜேஷ்: பாரூரில் நெல் கொள்முதல் மையம் அமைக்க இடம் கொடுத்தால், இந்த ஆண்டு அரசு நெல் கொள்முதல் மையம் அமைக்கப்படும். இதற்காக விவசாயிகள் காட்டும் இடத்தை வேளாண் விற்பனை துறை மூலம் ஆய்வு செய்யப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

## வேளாண் பல்கலை மாணவிகள்நெல் நடவு குறித்து பயிற்சி

கோபிசெட்டிபாளையம்: கோவை வேளாண் கல்லூரி மாணவியர், ஒரு வயலில் திருந்திய நெல் நடவு செய்து பயிற்சி பெற்றனர்.கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவியர் குழுக்களாக பிரிந்து, ஈரோடு மாவட்டத்தில் கோபி, டி.என்.பாளையம், நம்பியூர், அந்தியூர், பவானி, அம்மாபேட்டை ஆகிய வேளாண் வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் தங்கி, களப்பணி பயிற்சி பெறுகின்றனர்.பயிர் சாகுபடி முறை, விவசாயிகளின் சமூக பொருளாதார நிலை, மண் வளம் உள்ளிட்ட பல்வேறு புள்ளி விவரங்களை மாணவியர் சேகரித்து வருகின்றனர். மேலும், வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக நிர்வாகம் குறித்து 15 நாட்கள், கிராம தங்கல் திட்டத்தில் 30 நாட்கள், தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து 15 நாட்கள், வேளாணமை சார்ந்த தொழிற்சாலைகளில், 17 நாட்கள் என மொத்தம் இரண்டரை மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர்.கோபி மற்றும் டி.என்.பாளையம் வட்டாரத்தில் பயிற்சி பெறும் மாணவியர், 14 பேரும்,

ஒன்றிணைந்து செய்யாம்பாளையத்தில் ஒரு விவசாய நிலத்தில் திருந்திய நெல் நாற்று நடவு செய்து பயிற்சி பெற்றனர்.திருந்திய நெல் சாகுபடி செய்வதன் அவசியம் குறித்தும், அதனால் கிடைக்கும் நன்மைகள், மகசூல் அதிகரிப்பு, மேட்டுபாத்தி நாற்றங்கால் அமைப்பது குறித்து மாணவியர் விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.விவசாயிகள் கூறியதாவது: குத்து நாற்று முறையில் நெல் நடவு செய்வதை காட்டிலும், திருந்திய நெல் முறையில் நடவு செய்தால் கூடுலதாக மூன்று பொதி (800 கிலோ) நெல் கிடைப்பதாகவும், திருந்திய நெல் முறையில் கோனாவீடார் மூலம் களை எடுத்து விடலாம், என தெரிவித்தனர்.கோபி வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார், டி.என்.பாளையம் வேளாண்மை அலுவலர்கள் சரோஜா, முரளி உள்பட பலர் பயிற்சி அளித்தனர்.

## கால்நடை தீவனம் தட்டுப்பாடு எதிரொலிவயல்களில் சோளம் பயிரிட்ட விவசாயிகள்

ஈரோடு: மாவட்டத்தில் வறட்சியினால், தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நெல் பயிரிட்ட வயல்களில், விவசாயிகள் மானாவாரியாக சோளத்தை பயிரிட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை மூலம், கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை பாசன பகுதி என 3.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றன. நெல், கரும்பு, மஞ்சள், வாழையும், வறட்சி காலத்தில் சோளம், எள், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை ஆகியவை மானாவாரியாக பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பருவமழை பொய்த்து, நீர் நிலைகளில் தண்ணீர் வற்றிப்போயின. தவிர, மாவட்டத்தில் மஞ்சள் விலை சரிவை சந்தித்ததாலும், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், நெல், மஞ்சள், கரும்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிரிடுவதை குறைத்துக்கொண்டனர்.கரும்பு பயிரிட்ட விவசாயிகள், வறட்சியின் பிடியில் சிக்கினர். தவிர, கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்காமல், கரும்பு தோகையை பதப்படுத்தியும், கால்நடைகளை விற்கும் நிலைக்கு சென்றனர்.இந்நிலையில் நடப்பாண்டு பருவமழை முன்கூட்டியே பெய்த நிலையில், அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கீழ்பவானி, காலிங்கராயன் பாசன பகுதியில், வழக்கமான மானாவாரி பயிர்கள் பயிரிடும்

விவசாயிகளுடன், நெல் பயிரிடும் விவசாயிகள் இணைந்து, கால்நடை தீவனம் தேவையை அறிந்து சோளம் பயிரிட்டுள்ளனர்.இதுகுறித்து வெண்டிபாளையம் பகுதி விவசாயிகள் கூறியதாவது,காலிங்கராயன் பாசன பகுதியில் நெல், கரும்பு, வாழை பயிரிடப்படுவது வழக்கம். கடந்தாண்டு குறைந்த தண்ணீரை வைத்து நெல் பயிரிட்டு, கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து, அறுவடை செய்துவிட்டோம். நடப்பாண்டு காலிங்கராயன் வாய்க்காலில், 50 கோடியில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.இரண்டு மாதத்தில், 6 முறை நல்ல மழை பெய்துள்ளதால், கால்நடைகளுக்கு தீவனமாக இருக்கட்டும் என நெல் வயலில் சோளம் பயிரிட்டோம். தவிர, வெளிச்சந்தையில் ஒரு லோடு சோளத்தட்டு, 24 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது. ஒரு மாதத்தில் அறுப்புக்கு வந்துவிடும், பின் வழக்கம்போல நெல்லை பயிரிட்டு விடுவோம், என்றனர்.

### விதை நெல் கிலோவுக்கு ரூ.5 மானியம்வேளாண் மையத்தில் 26 டன் இருப்பு

ஈரோடு: விதை நெல்லின் விலை கிலோவுக்கு, 12 ரூபாய் உயர்ந்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு கிலோவுக்கு, 5 ரூபாய் மானியத்தில் வழங்கிட, 26 டன் விதை நெல்லை, ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்துள்ளனர்.ஈரோடு தாலுகா அலுவலக வளாகத்தில், ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க மையம் அலுவலகம் அமைந்துள்ளது. நடப்பாண்டு பருவமழையினால், பவானிசாகர் அணைக்கு போதிய தண்ணீர் கிடைத்துள்ளது. முதற்கட்டமாக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பிற பாசனப்பகுதிக்கும் கட்டாயம் தண்ணீர் திறக்கப்படும்.கடந்தாண்டு விவசாயம் முழுØமாக பாதித்த நிலையில், நடப்பாண்டு விவசாயிகள் தங்கள் நிலங்களில் நெல் பயிரிட தயார் நிலையில் உள்ளனர். போதிய மழையின்றி நெல் பயிரிடும் பரப்பு குறைந்தது.
இதனால், கிலோ, 20 ரூபாய்க்கு விற்கப்பட்ட விதை நெல், 12 ரூபாய் அதிகரித்து, தற்போது கிலோ, 32 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயிகள் நலன் கருதி, வேளாண் துறையில் மானிய விலையில் விதை நெல் வழங்க உத்தரவிடப்பட்டது.இதன்படி, ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், பி.பி.டி., ஏ.எஸ்.டி.,16, ஏ.டி.டி.,38., கோ 48 ரக விதை நெல்களுக்கு கிலோவுக்கு, 5

ரூபாய் மானியம் விலையில் விற்பனைக்கு உள்ளது.ஈரோடு, சித்தோடு வேளாண் விரிவாக்க மையத்தில், 26 டன் விதை நெல்லை இருப்பு வைத்துள்ளனர். விவசாயி ஒருவருக்கு, ஒரு எக்டேருக்கு, 100 கிலோ விதை நெல் மட்டும் வழங்கப்படும்.தவிர, நெல் பயிரிடும் முன் பயன்படுத்தப்படம், பசுந்தாழ் உரம், தக்கை, பூண்டுக்கான விதைகள், 3 டன் இருப்பில் உள்ளது. உரங்கள் பயன்படுத்துவதை தவி ர்க்க, பசுந்தாழ் உரங்களை பயிரிட விவசாயிகள் முன்வரவேண்டும், என கேட்டுக்கொண்டுள்ளனர்.

## மழை தொடர்வதால் அணைகளில்நீர்மட்டம் உயர்வு

மஞ்சூர்:மஞ்சூரில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடர்கிறது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, குந்தா, கெத்தை அணைகள் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. மாவட்டத்தில் பெரிய அணையாக கருதப்படும் அப்பர்பவானி அணையில் 180, அவலாஞ்சியில் 160.5, எமரால்டு 162.5, குந்தா 88.5, அடி அளவுக்கு தண்ணீர் இருப்பு உள்ளது.மஞ்சூர் பகுதிகளில் முக்கிய நீரோடைகளான ஒசஹட்டி, போர்த்திஹாடா, தங்காடு தோட்டம் பிக்குலி உள்ளிட்ட நீரோடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேற்கண்ட நீரோடைகளில் பெருக்கெடுத்தும் ஓடும் தண்ணீர், பில்லூர் அணையில் சேகரமாகிறது. பில்லூர் அணையின் நீர் மட்டம் 242 அடியில் அணை நிரம்பி உள்ளது. வெளியேற்றப்படும் உபரி நீர் பவானி அணையில் சேகரமாகிறது.

## சொட்டுநீர் பாசனவிழிப்புணர்வு முகாம்

சொட்டுநீர் பாசன விழிப்புணர்வு முகாம் கிருஷ்ணராயபுரத்தில் நடந்தது.தோட்டக்கலைத்துறை சார்பில், கிருஷ்ணராயபுரம் வட்டாரம் பழையஜெயங்கொண்டத்தில் சொட்டுநீர் பாசன விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதில், தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தலைமை வகித்து பேசினார்.இத்திட்டம் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியம், தண்ணீர்

பற்றாக்குறையாக இருக்கும் நிலையில்காய்கறி, பழமரங்கள், தென்னை, கரும்பு போன்ற பயரிகளுக்கு சொட்டுநீர் பாசன அவசியம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.முகாமில் உதவி அலுவலர் சந்திசேகர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சாதனை விவசாயிகள் அனுபவத்தை கூற எதிர்ப்பு : கலெக்டர் சமரசத்தால் கூட்டத்தில் அமைதி

நாமக்கல்: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், சாதனை படைத்த விவசாயிகள், தங்களது அனுபவத்தை கூறுவதற்கும், தனியார் வேளாண் நிறுவன பிரதிநிதிகள், தங்களது நிறுவன தயாரிப்பு குறித்து விளக்கி கூறுவதற்கும், விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதையடுத்து, ""இக்கோரிக்கையை பரிசீலனை செய்யப்படும்,'' என, கலெக்டர் தட்சிணாமூர்த்தி அறிவித்தையடுத்து, கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது.நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், ஒவ்வொரு மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடப்பது வழக்கம். அந்த கூட்டத்தில், விவசாயிகள், தங்களது இடர்பாடுகள் குறித்து, நேரடியாக, மாவட்ட கலெக்டரிடம் தெரிவிக்கலாம்.அந்த புகார் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் உடனடியாக தீர்வு காண, கலெக்டர் உத்தரவிடுவார். இந்நிலையில், நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், ஓராண்டாக விவசாயிகள் குறைதீர் கூட்டம் துவங்கியுடன், விவசாயத்தில் சாதனை படைத்த விவசாயிகளின் அனுபவம் அல்லது வேளாண் சம்மந்தப்பட்ட தனியார் நிறுவன பிரதிநிதிகளை பேச வைப்பது வாடிக்கையாக உள்ளது.அவ்வாறு பேசும் விவசாயிகள், தாங்கள் மேற்கொள்ளும் சாகுபடி உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறுவர். அதுபோல், தனியார் வேளாண் நிறுவனத்தை சேர்ந்த பிரதிநிதிகள், தங்களது தயாரிப்பு உள்ளிட்டவை குறித்து, தொழில்நுட்ப விளக்கம் அளிப்பர். இந்த நிகழ்வு முடிவதற்கு மதியம், 1 மணியாகும். அதன்பின், விசாயிகளிடம், அதிகாரிகள் மனு பெறுவர்.இந்த தாமதம் காரணமாக, பல விவசாயிகள், தங்களது குறையை தெரிவிக்காமல், பாதியுடன் கிளம்பிச் சென்று விடுவர். தவிர, இது, விவசாயிகள் தரப்பில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. எனினும், இந்நடைமுறை, ஓராண்டாக பின்பற்றப்பட்டு வந்தது. மாவட்ட கலெக்டராக

ஜகந்நாதன் பொறுப்பேற்றவுடன், இம்முறை பின்பற்றப்பட்டு வந்தது.இந்நிலையில், கலெக்டர் ஜகந்நாதன் மாற்றப்பட்டு, தற்போது தட்சிணாமூர்த்தி, கலெக்டராக பொறுப்பேற்றுள்ளார். அவர் பொறுப்பேற்ற பின், நேற்றைய முதல் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்றார். அந்தக் கூட்டத்தில், ""விவசாயிகள், நாட்டின் முதுகெலும்பு. எனவே, விவசாயிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, அவர்களது பிரச்னைக்கு தீர்வு காணப்படும்," என, கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசினார்.அவர் பேசி முடித்த பின், வழக்கம் போல், சாதனை படைத்த விவசாயிகள், தங்களது அனுபவங்களை பகிர்ந்தனர். அதுபோல், ஈரோட்டை சேர்ந்த தனியார் நிறுவன பிரதிநிதி ஒருவரும், தங்கள் நிறுவன செயல்பாடு குறித்து விளக்கிக் கூறினார். பகல், 12.30 மணிவரை இது நீடித்தது. அதன்பின், மனுக்கள் மீது பதிலளிக்கப்படும் என, கலெக்டர் தெரிவித்தார்.அப்போது பேசிய விவசாயிகள் சிலர், விவசாய தொழில்நுடப்பம் தொடர்பாக வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் துறை ஆகியவை உள்ளது. எனவே, குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள், தங்களது குறையை தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும். இதுபோன்ற தொழில்நுட்ப விளக்கம் தேவையில்லை என, எதிர்ப்பு தெரிவித்தனர்.அதற்கு, கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளும், மேஜையை தட்டி வரவேற்பு அளித்தனர். அதை கவனித்த கலெக்டர் தட்சிணாமூர்த்தி, ""விவசாயிகளின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும். அதுபோல், இனி வரும் கூட்டத்தில் கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அல்லது வேளாண் இணை இயக்குனர் குறிப்பிடும் பெயர் விவரப்படி விவசாயிகள் பேச வேண்டும்," என்றார்.அதன்பின், விவசாயிகள் தங்களது குறைகள் குறித்து தெரிவித்து விளக்கம் பெற்றனர்.

### கால்நடை முகாம்

அரூர்: அரூர் யூனியன், ஹெச்.அக்ரஹாரம் கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகித்தார். அமைச்சர் பழனியப்பன், முகாமை துவக்கி வைத்து, கன்றுகள் அணி வகுப்பு நடத்தி, சிறந்த ஐந்து கன்றுகளுக்கு பரிசு வழங்கினார்.நாட்டு கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் பத்து பயனாளிகளுக்கு, 63,500க்கான மானியமும், பத்து பயனாளிகளுக்கு தீவன

விதை சோளம் வழங்கப்பட்டது. பசு மற்றும் எருமை மாடுகளுக்கு மலட்டு தன்மை நீக்கம் செய்தல், சினை பரிசோதனை, சினை ஊசி போடுதல், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, தடுப்பூசிகள், ஆடு, மாடுகளுக்க குடற்புழு நீக்கம் செய்தல், சுண்டுவாத அறுவை சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.அக்ரஹாரம், நெருப்பாண்டகுப்பம், ஆட்டியானூர், வெளாம்பட்டி, சோலைக்கொட்டாய், தூரணம்பட்டி, உள்ளிட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் கால்நடைகளை பரிசோதனைக்கு அழைத்து வந்தனர்.கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் பாண்டியன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அன்பழகன், மாவட்ட பால்வளத்துறை தலைவர் ராஜேந்திரன், யூனியன் சேர்மன் தென்னரசு, பஞ்சாயத்து தலைவர் சுதா, உதவி இயக்குனர் இளங்கோவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வீட்டு மனைகளாக மாறும் விளை நிலங்கள்கரூரில் கேள்விக்குறியாகும் விவசாயம்

கரூர்: கரூர் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாக மாறி வருகிறது. இதனால் நாளடைவில் அமராவதி மற்றும் காவிரியாறு சூழ்ந்த பகுதியான கரூர் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயம் சார்ந்த பணிகள் எதிர்காலத்தில் கேள்விகுறியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த கரூர் பகுதிகளில் அமராவதி ஆறு மற்றும் காவிரியாற்று நீரால் விவசாயம் முதன்மை தொழிலாக இருந்தது. விவசாய பகுதியாக இருந்த கரூரில் ஜவுளி தொழில் மெல்ல, மெல்ல வளர்ச்சியடைந்தது.இருபெரும் ஆறுகள் சூழ்ந்த பகுதிகளாக இருந்த கரூரில், சாயப்பட்டரைகள் எளிதாக உருவாயின. இதனால் ஜவுளி தொழில் கரூரில் அபாரமான உச்சத்தைத் தொட்டது.தொடர்ந்து பஸ்களின் கூடுகளுக்கு பாடி கட்டும் தொழில் கரூரில் தலையெடுத்தது. ஜவுளி தொழிலும், பஸ் பாடி கட்டும் தொழிலும் கரூரில் போட்டு போட்டு வளர்ந்ததால், கரூரும் வளர்ந்தது. இதனால் தமிழகத்தில் மற்ற மாவட்டங்களின் உள்ள தொழிலாளர்களின் பார்வை கரூர் மீது விழுந்தது.

இந்நிலையில் கடந்த 1995ம் ஆண்டு திருச்சியில் இருந்து கரூர் தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டது. அந்த நிலையில் பஸ் பாடி கட்டுதல் மற்றும் ஜவுளி தொழில்களை

அடுத்து, கொசுவலை உற்பத்தி செய்யும் தொழிலும் வளர்ச்சியடைந்தது. தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கான தொழிலாளர்கள் கரூரில் குவிந்தனர்.இதனால் கரூர் நகரம் விரிவடைந்ததால், அருகில் உள்ள விவசாய நிலங்கள், மெல்ல வீட்டு மனைகளாவும், ஜவுளி மற்றும் பஸ் பாடி கட்டும் நிறுவனங்களாவும் மாறின. நாளடைவில் அமராவதி ஆற்றில் சாயக்கழிவுகள் கலந்ததால், விவசாய பணிகள் பாதிக்கப்படுவதாக கூறி, சில விவசாயிகள் நிலத்தை விற்பனை செய்து விட்டு வேறு தொழில்களுக்கு தாவினர்.அந்த விளை நிலங்களும் வர்த்தக கட்டிடங்களாக மாறின. சில பகுதிகளில் வாய்க்கால்கள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாயின. தங்க நாற்கர சாலை அமைக்கப்பட்டதால், விவசாய நிலங்களுக்கு அதிக விலை கிடைத்தது. விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை, உரம் தட்டுபாடு மற்றும் இயற்கை இடர்பாடுகளால் விளைநிலங்கள் தராளமாக விற்பனை செய்யப்பட்டது.அமராவதி ஆற்றுப்பகுதியின் விவசாய பகுதிகளாக இருந்த கரூர் நகருக்கு அருகிலுள்ள திருக்காம்புலியூர், சின்ன ஆண்டாங்கோவில், பெரிய ஆண்டாங்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் இருந்த விவசாய நிலங்களில் குடியிருப்புகள் விரைவாக தோன்றின.இதனால் அமராவதி ஆற்றின் ராஜவாய்க்காலில் பொருத்தப்பட்ட மதகுகள் குடியிருப்புகளின் நடுவே இன்றும் கம்பீரமாக காணப்படுகிறது.மழைக்காலங்களில் குறிப்பாக அமராவதி ஆற்றில் வெள்ளம் ஏற்படும் நிலையில் மட்டும், வாய்க்காலில் தண்ணீர் ஓடும் நிலை உள்ளது. அந்த நிலையில் கூட விவசாயம் செய்ய முடியாத நிலையில், விளைநிலங்கள், வீட்டு மனைகளாவும், அடுக்கு மாடி குடியிருப்புகளாகவும், வர்த்தக நிறுவனங்களாகவும் மாறி வருகிறது.இந்த நிலை தொடரும் பட்சத்தில் எதிர்காலத்தில் மழை காரணமாக கரூர் மாவட்ட பகுதிகளில் உள்ள காவிரி மற்றும் அமராவதி ஆறுகளில், அதிகளவில் தண்ணீர் சென்றாலும், விவசாயம் செய்ய போதிய நிலம் இல்லாமல் விவசாயிகள் தடுமாறும் நிலை ஏற்படும்.எனவே, "கரூர் மாவட்டத்தில் விவசாய நிலங்களை விற்பனை செய்ய தடை விதித்து, புதிய கட்டுபாடு களை தமிழக அரசு வகுக்க வேண்டும்' என, அனைத்து தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர்.

## கால்நடை தீவனம் தட்டுப்பாடு எதிரொலிவயல்களில் சோளம் பயிரிட்ட விவசாயிகள்

ஈரோடு: மாவட்டத்தில் வறட்சியினால், தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நெல் பயிரிட்ட வயல்களில், விவசாயிகள் மானாவாரியாக சோளத்தை பயிரிட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை மூலம், கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை பாசன பகுதி என 3.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெறுகின்றன. நெல், கரும்பு, மஞ்சள், வாழையும், வறட்சி காலத்தில் சோளம், எள், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை ஆகியவை மானாவாரியாக பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பருவமழை பொய்த்து, நீர் நிலைகளில் தண்ணீர் வற்றிப்போயின. தவிர, மாவட்டத்தில் மஞ்சள் விலை சரிவை சந்தித்ததாலும், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், நெல், மஞ்சள், கரும்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிரிடுவதை குறைத்துக்கொண்டனர்.கரும்பு பயிரிட்ட விவசாயிகள், வறட்சியின் பிடியில் சிக்கினர். தவிர, கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்காமல், கரும்பு தோகையை பதப்படுத்தியும், கால்நடைகளை விற்கும் நிலைக்கு சென்றனர்.இந்நிலையில் நடப்பாண்டு பருவமழை முன்கூட்டியே பெய்த நிலையில், அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கீழ்பவானி, காலிங்கராயன் பாசன பகுதியில், வழக்கமான மானாவாரி பயிர்கள் பயிரிடும் விவசாயிகளுடன், நெல் பயிரிடும் விவசாயிகள் இணைந்து, கால்நடை தீவனம் தேவையை அறிந்து சோளம் பயிரிட்டுள்ளனர்.இதுகுறித்து வெண்டிபாளையம் பகுதி விவசாயிகள் கூறியதாவது,காலிங்கராயன் பாசன பகுதியில் நெல், கரும்பு, வாழை பயிரிடப்படுவது வழக்கம். கடந்தாண்டு குறைந்த தண்ணீரை வைத்து நெல் பயிரிட்டு, கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து, அறுவடை செய்துவிட்டோம். நடப்பாண்டு காலிங்கராயன் வாய்க்காலில், 50 கோடியில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.இரண்டு மாதத்தில், 6 முறை நல்ல மழை பெய்துள்ளதால், கால்நடைகளுக்கு தீவனமாக இருக்கட்டும் என நெல் வயலில் சோளம் பயிரிட்டோம். தவிர, வெளிச்சந்தையில் ஒரு லோடு சோளத்தட்டு,

24 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது. ஒரு மாதத்தில் அறுப்புக்கு வந்துவிடும், பின் வழக்கம்போல நெல்லை பயிரிட்டு விடுவோம், என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 27.07.2013

### வறட்சியான பிரதேசங்களிலும் தாவரங்கள் வளரும்



நீரில்லாத வறட்சியான பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்துள்ளனர். நீரை உறிஞ்சி சேமித்து வைப்பதன் மூலம் அதனை எதிர்காலத் தேவைக்கு உபயோகப்படுத்தலாம். நீரை உறிஞ்சி சேமித்து வைப்பதன் பொருட்டு சொலிட் ரெய்ன் எனும் சீனியைப் போன்ற தூள் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இது பொட்டாசியம் பொலியகிரைலேட் எனும் மூலப் பொருளால் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த தூளானது அதன் உருவத்தைப் போல 500 மடங்கு அளவு நீரை உறிஞ்சி சேமித்து வைத்துக் கொள்ளக்கூடியது. மேலும், 10 கிராம் சொலிட் ரெய்ன் தூள்கள் 1 லிட்டர் நீரினை ஜெல்லாக மாற்றி தம்முள் சேமித்து வைக்கும் திறன் படைத்தன. சுமார் 1 வருட காலத்திற்கு ஆவியாகாமல் அந்நீரை சொலிட் ரெய்ன் தூள்கள் சேமித்து தனக்குள் வைக்கக்கூடியது. பின்னர் இதனை மண்ணுக்குள் போடுவதன் மூலம் தாவரங்களின் வேர்களால் அந்நீரு உறிஞ்சப்பட்டு வளர்கின்றன என்று கூறுகின்றனர்.

### மானிய விலையில் காய்கறி விதைகள்

விருத்தாசலம்: விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:விருத்தாசலம் வட்டார விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள் வழங்கப்படுகிறது. தற்போது வெண்டை, சக்தி வீரிய ரக விதை 50 சதவீத மானியத்தில் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. மேலும் செடி அவரை, கீரை வீதை, கொத்தவரை, பாகல், கத்தரி, புடல், வெங்காயம் விதைகளும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் இயங்கும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விளக்கு பொறி**

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில்  விளக்கு பொறி வழங்கப்பட்டது.  இதுகுறித்து நாமகிரிப்பேட்டை வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணவேணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிரிட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மானியத்தில் விளக்குபொறி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நிலக்கடலை மற்றும் பயறுவகை பயிர்களுக்கு தீமை செய்ய கூடிய அனைத்து பூச்சி இனங்களையும் பிடித்து எளிதாக அழித்துவிட முடியும். தினமும் மாலை 2 மணி நேரம் மட்டும் விளக்கினை எரியவிட்டால் போதும். அனைத்து வித பூச்சிகளும் சிக்கிக்கொள்ளும். இதன் முழு விலை ரூ. 1500. இதில் ரூ. 500 மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் பங்குதொகை ரூ.1000 மட்டுமே. தற்போது இந்த விளக்கு பொறி நாமகிரிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் நேரில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**அசோலா பசுந்தீவனம் வழங்கினால் மாடுகள் 15 சதவீதம் கூடுதலாக பால் கறக்கும்**

க.பரமத்தி, : அசோலா பசுந்தீவனம் வழங்கினால் மாடுகள் 15 சதவீதம் கூடுதலாக பால் கறக்கும் என்று கால்நடை டாக்டர் மோகன்ராஜ் பேசினார்.

நீர், நிளவள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் க.பரமத்தி ஒன்றியம் சின்னதாராபுரம் ஊராட்சி புளியம்பட்டியில் அசோலா பசுந்தீவன வளர்ப்பு செயல் விளக்க கூட்டம் நேற்று நடைபெற்றது. பால் உற்பத்தியாளர் சங்க நிர்வாகி பழனிச்சாமி வரவேற்றார். சின்னதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் தலைமை வகித்து பேசியதாவது,

தற்போது ஒன்றியத்தில் போதிய மழை இல்லாததால் கடும் வறட்சியாக உள்ளது. இந்த நேரத்தில் கால்நடை விவசாயிகள் தங்களது நிலத்தில் நிழல் உள்ள இடங்களில் குறைந்த பட்சம் 4 மணி நேரம் சூரிய ஒளி மிதமாக படும் இடத்தில் அசோலா பசுந்தீவனத்தை பயிரிட்டு அடர்தீவனத்திற்கு மாற்று பயிராக கால்நடைகளுக்கு பயன்படுத்தலாம். இந்த பயிரானது பயிரிட்ட 10வது நாள் நிறைவுற்ற நிலையில் ஒன்றரை சதுர மீட்டருக்கு குறைந்தது, ஒரு கிலோ வீதம் தினமும் அறுவடை செய்யலாம். இந்த தீவனத்தை நன்கு சுத்தமாக நீரில் கழுவி கால்நடைகளுக்கு வழங்குவது நல்லது.

இதில் புரதசத்து 30 சதவீதத்திற்கு மேல் உள்ளது. இந்த அசோலா பசுந்தீவனத்தில் முக்கிய தாதுகளான கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின், வீட்டகரோடின் ஆகிய சத்துகள் அதிகமாக உள்ளது. கால்நடைகளின் பால் உற்பத்தி திறன் அதிகரிப்பதோடு, கால்நடைகளின் உடல் எடை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. பசுந்தீவனத்தை கறவை மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியானது 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பாலில் திடப்பொருள் அதிகம் சேருவதால், பாலுக்கு நல்ல விலை கிடைக்கும். விவசாயிகள் லாபம் பெறலாம். அசோலா பசுந்தீவனத்துடன் அடர்தீவனத்தை கலந்து கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அடர்தீவனத்திற்காக விவசாயிகள் செலவிடப்படும் செலவின தொகை குறைய

வாய்ப்புள்ளது.

எனவே இந்த அசோலா பசுந்தீவனத்தை விவசாயிகள் பயிரிட்டு பயன்பெற வேண்டும். இந்த அசோலா பசுந்தீவனத்தை மாடு, எருமை மட்டுமல்லாது ஆடு, கோழி போன்றவைகளுக்கும் வழங்கலாம்.

இவ்வாறு கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் ரூ.1,200 மதிப்புள்ள (பிளாஸ்டிக்) தொட்டி, அசோலா விதைகள் வழங்கப்பட்டது. 30க்கும் மேற்பட்ட விவசாயிகள், கால்நடை உதவியாளர் மரியஉபகாரம் ஆகியோர் பங்கேற்றனர். முடிவில் கால்நடை ஆய்வாளர் மணி நன்றி கூறினார்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் தொடக்க விழா**

அரூர்: அரூர் அடுத்த அக்ரகாரத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் தொடக்க விழா நடைபெற்றது. கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் பாண்டியன் வரவேற்று பேசினார். உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன், முகாமை துவக்கி வைத்து பேசியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டில், கால்நடை பராமரிப்பு துறை மூலம் 112 முகாம்கள் நடத்த அரசாணை பெறப்பட்டுள்ளது. முகாமில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், மலடு நீக்க சிகிச்சை உள்ளிட்டவை இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் பாலக்கோடு எம்எல்ஏ அன்பழகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் அன்பழகன், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் முருகன், ஒன்றிய குழு தலைவர் தென்னரசு, கால்நடை உதவி இயக்குநர்கள், மருத்துவர்கள் ராமகிருஷ்ணன், கனகசபை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரம்பும் வகையில் மேட்டூரில் தண்ணீர் திறக்க வேண்டும்**

திருச்சி, : டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரம் பும் வகையில், மேட்டூரில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காவிரி டெல்டா நீர்பாசன விவசாயிகள் நலசங்க கூட்டம் திருச்சி வானொலி உழவர் சங்கத்தில் நேற்று நடந்தது. துணை தலைவர் மகாதானபுரம் ராஜாராம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், கல்லணைக்கு கீழே காவிரி பாசன பகுதியில் புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் பகுதியில் உள்ள 106 ஏரிகள், கட்டளை மேட்டு வாய்க்கால் மற்றும் உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசன பகுதியில் உள்ள 40 ஏரிகள், தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள 935 ஏரிகளில் நீர் நிரம்பும்படியும், நேரிடை பாசன வசதிக்கு ஏற்றபடி மேட்டூரில் இருந்து நீர் விட வேண்டும்.

இந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகளும் 4 முறை நிரம்பினால் தான் 1 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் முழு பாசனம் பெற முடியும். அதேபோல் கட்டளை கதவணையில் 1.5 டிஎம்சி நீர் இருக்கும்படி பார்த்துக்கொண்டு பாசனத்திற்கு தேவையான நீரை மேட்டூரில் இருந்து திறக்க வேண்டும். ஆடி18ஐ கருத்தில் கொண்டும், டெல்டா பாசனத்துக்கும் ஆகஸ்ட் முதல் தேதியே 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்த மாநில அரசு, மத்திய அரசு நிதி பெற்று இன்சூரன்ஸ் செய்த, செய்யாத அனைத்து பயிர் விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை தமிழக முதல்வருக்கு அனுப்பி வைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

தீட்சிதர் பாலு, ஓய்வு பெற்ற பொறியாளர் நட ராஜன், ஆலோசகர் கணபதி மற்றும் பலர் கலந்து கொண் டனர். செயலாளர் காந்திபித்தன் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.07.2013**

## முன்குறுவை சாகுபடிக்காக மணிமுத்தாறு அணையில் தண்ணீர் திறப்பு 7 ஆயிரத்து 524 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்

அம்பை,

மணிமுத்தாறு அணையில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள நிலங்களுக்கு முன் குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 7 ஆயிரத்து 524 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

<u>தண்ணீர் திறப்பு</u>

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையில் இருந்து தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள மருதூர் மேலக்கால்வாய் மற்றும் மருதூர் கீழக்கால்வாய் ஆகியவற்றின் கீழ் உள்ள 7 ஆயிரத்து 524 ஏக்கர் நேரடி பாசன பரப்புகளுக்கு முன்குறுவை பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பூ.செந்தூர் பாண்டியன் ஆகியோர் அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தனர். இதன் மூலம் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம் உள்ளடக்கிய தாலுகாக்கள் மற்றும் கிராமங்கள் பயன் பெறும்.

<u>பாசன வசதி</u>

அணையில் தண்ணீரை திறந்து வைத்து அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் கூறியதாவது:– தமிழக முதல்–அமைச்சர் எப்போதும் விவசாயிகள் நலனை

கருத்தில் கொண்டு எண்ணற்ற நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தற்போது விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று முன்குறுவை சாகுபடி செய்ய வசதியாக தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள 7,524 ஏக்கர் பயன்பெறும் வகையில் மருதூர் மேலக்கால் மற்றும் மருதூர் கீழக்கால்

**நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளுக்கு துறை ரீதியாக அனைத்து உதவியும் செய்யப்படும் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் உறுதி**

நாமக்கல்,

“விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பாவார்கள். எனவே அவர்களுக்கு துறை ரீதியாக அனைத்து உதவிகளும் செய்யப்படும்” என குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

குறைதீர் கூட்டம்

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பேசியதாவது:-

தற்போது 112 கோரிக்கை மனுக்கள் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டு உள்ளது. கூட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் வறட்சி நிவாரணநிதி சரிவர கிடைக்கப்பெற வில்லையென தெரிவித்துள்ளீர்கள். வறட்சி நிவாரண நிதியைப் பொறுத்தவரை தகுதியுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

இந்திய நாட்டை பொறுத்தவரையில் 70 சதவீதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்த நிலை மாறி தற்போது கணக்கெடுப்பின்படி 70 சதவீதத்தில் இருந்து படிப்படியாக விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை குறைந்து உள்ளது. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பாகும். வறட்சி மாவட்டமாகிய நாமக்கல் மாவட்ட விவசாயிகள், விவசாயம் செய்வதில் ஆர்வம் காட்டி விவசாயத்தை ஊக்குவிக்கும் வண்ணம் பல்வேறு உக்திகளை கையாண்டு விவசாயத்தை

பெருக்குகிறீர்கள். அந்த வகையில் விவசாயிகளாகிய உங்களுக்கு எந்த வகையில் நன்மை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு துறை ரீதியாக அனைத்து உதவிகளும் செய்யப்படும். தனிப்பட்ட முறையில் விவசாயம் சார்ந்த பிரச்சினைகள் இருந்தாலும், என்னை அனுகினால், துறை சார்ந்த அலுவலர்களிடம் கலந்தாலோசித்து குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.

ரூ.55 கோடி நிவாரணம்

நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சி நிவாரணம் பெறுவதற்கு தகுதியான விவசாயிகள் 1 லட்சத்து 26 ஆயிரத்து 845 என கணக்கு எடுக்கப்பட்டு உள்ளது. இவர்களில் 1 லட்சத்து 23 ஆயிரத்து 821 நபர்களுக்கு ரூ.55 கோடியே 6 லட்சத்து 23 ஆயிரத்து 814 மதிப்பிலான நிவாரணத் தொகை வழங்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 37 லட்சத்து 63 ஆயிரத்து 825 மதிப்பிலான நிவாரணத்தொகை படிப்படியாக வழங்கப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் விவசாய நிலங்களில் பயிர் செய்து 50 சதவீதத்திற்கும் மேல் பாதிப்பு ஏற்பட்டு இருந்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முறையாக வழங்கப்படுகிறது. தற்போது தேவையான அளவு எல்லா விவசாய கிடங்குகளிலும், விதை மற்றும் உரங்கள் இருப்பில் உள்ளது.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

மனுக்கள் மீது நடவடிக்கை

கூட்டத்தில் சொட்டுநீர் பாசனம் மூலம் நெல்பயிர் சாகுபடி குறித்த அறிமுக விளக்கம், நிலக்கடலை பயிர் சாகுபடி, மரவள்ளிக் கிழங்கு சாகுபடி, பண்ணைக் குட்டை அமைத்தல், மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையாளர்கள் குழு அமைத்தல், தேனீ வளர்ப்பு முறைகள் மூலம் பயன் பெற்ற விவசாயிகள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர். மேலும் வறட்சி நிவாரணம் வழங்கிட வேண்டுமென விவசாயிகளிடம் இருந்து வரப்பெற்று உள்ள மனுக்கள்

சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அளித்து ஆய்வு செய்து, மனுதாரர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செங்குட்டுவன், இணை இயக்குநர் (வேளாண்மை) ராஜேந்திரன், திருச்செங்கோடு உதவி கலெக்டர் கவிதா, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) மரு.சக்திவேல், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்பட அரசுத்துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறை தீர்க் கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் விவேகானந் தன் கூறினார்.

குறைதீர்க்கும் கூட்டம்

தர்மபுரி மாவட்ட விவசாயி கள் குறைதீர்க்கும் நாள் கூட் டம் தர்மபுரி கலெக்டர் அலு வலகத்தில் கலெக்டர் விவே கானந்தன் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் மனோகரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வீரனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் சுசீலா, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராமதாஸ், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகே சன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் பாண்டியன், உதவி பேராசிரி யர்

மீனரோஷனி உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது:-

தர்மபுரி மாவட்டத்தில் 80 சதவீத நிலங்கள் மானாவாரி நிலங்களாக உள்ளன. மீத முள்ள 20 சதவீத நிலங்கள் தண்ணீர் பாசன வசதியுடன் உள்ளன. போதிய அளவில் மழை பெய்தால் மட்டுமே விவசாயத்தை நல்லமுறையில் மேற்கொள்ள முடியும் என்ற நிலை இந்த மாவட்டத்தில் நிலவுகிறது. போதிய அளவில் மழை பெய்யாத காலங்களிலும் இருக்கும் தண்ணீரை சிக்கன மாக பயன்படுத்தி விவசா யத்தை நல்ல முறையில் செய் வதற்கான நடவடிக்கைகளை இந்த மாவட்டத்தில் மேற் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

விழிப்புணர்வு

தர்மபுரி மாவட்டத்தில் விவ சாயம் சார்ந்த தொழிற்சாலை களை அதிக அளவில் உரு வாக்கி விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக் கப்படும். விவசாய பொருட் களின் உற்பத்தி மிக அதிக அளவில் அதிகரிக்கும்போது ஏற்படும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படு வதை தடுக்க மதிப்பு கூட்டு பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளை தொடங் கவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயத்தோடு ஒருங் கிணைந்த மீன்வளர்ப்பு, கால் நடை வளர்ப்பு உள்ளிட்ட தொழில்களை மேற்கொள்ள மானிய உதவிகள் வழங்கப்பட உள்ளன. விவசாய கருவிகளை மானிய உதவியுடன் வழங்கு தல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுதிட்டங்கள் குறித்து விளக்க இந்த வளாகத் தில் விவசாய கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. விவ சாய மேம்பாட்டு திட்டங்கள் குறித்த தகவல்களை அறியும் விவசாய சங்க பிரதிநிதிகள் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் அது தொடர் பாக விவசாயிகளிடம் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண் டும்.

இவ்வாறு கலெக்டர் விவேகானந்தன் பேசினார்.

கண்காட்சி

இந்த கூட்டத்தில் மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், விவசாயி கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினர். விவசாயி களின் கோரிக்கைகளை நிறை வேற்ற நடவடிக்கை எடுக்கப் படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.

கூட்டத்தையொட்டி வேளாண் துறைகள் சார்ந்த கண்காட்சி கலெக்டர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டு இருந்தது. இதனை கலெக்டர் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் பார்வையிட்டனர்.